**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 47/2010**

**PROSECUTION WITNESS NO. 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** : | **D.R.** சூர்யகுமார் | **Caste** : | |
| **Father's/Husband Name** : | டேவிட் | **Religion** : | கிறிஸ்தவர் |
| **Village** : | **2,** குபேரன் நகர், விரிவாக்கம் மெயின்ரோடு, மடிப்பாக்கம் | **Calling** : | வங்கி ஊழியர் (ஓய்வு) |
| **Taluk** : | சென்னை **600 091** | **Age** : | **66/2023** |

**(Accused 1 and 2 Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. எம். உதயராணி**, தட்டச்சர்

**<u>C.C.No. 47/2010 15.06.2023</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.15**

## முதல் விசாரணை:

**1.** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சென்னை Bank of India வேலச்சேரி கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து கடந்த 28.02.2017 ஆம் தேதி பணி ஓய்வு பெற்றேன். பட்டியல் சா ட்சி 1 நடராஜன் என்பவரை எனக்கு தெரியாது. 1 ஆம் எதிரி ராமலிங்கம் என்பவரை தெரியும். 2 ஆம் எதிரி பக்கிரிசாமி என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 31.05.2008 ஆம் தேதியிலிருந்து Bank of India தஞ்சாவூர் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்தேன். அப்போது ராமலிங்கம் என்பவர் ரூ.15,00,000/- எங்கள் வங்கியிலிருந்து அடமான கடன் ஏற்கனவே பெற்றிருந்தார். மேற்படி கடனுக்காக தஞ்சாவூரில் உள்ள வீடு, நிலத்தை அடமானம் வைத்திருந்தார்.

2. இதன் பின்பு நடராஜபிள்ளை என்பவர் ஒரு வக்கில் நோட்டீஸ் வங்கிக்கு அனுப்பியிருந்தார். அதில் ராமலிங்கம் கொடுத்த உயில் தவறானது என்று சொல்லியிருந்தார். அதற்கு வங்கியிலிருந்து பதில் அறிவிப்பு அனுப்பினோம். நடராஜபிள்ளை கொடுத்த புகாரின் பேரில் 2008 ஆம் ஆண்டு மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் என்னை வங்கியில் வந்து விசாரித்தார்கள். அப்போது குறிப்பிட்ட உயிலின் அசல் கேட்டிருந்தார்கள். அதனை நான் True copy போட்டு கொடுத்தேன். அதன் பின்பு 2009 ல் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில்

**C.C.No. 47/2010 15.06.2023**

வழக்கறிஞர் கணேசன் என்பவர் வழங்கிய legal opinion யையும் வழக்கறிஞர் சந்திரமோகன் என்பவர் வழங்கிய legal opinion யையும் மற்றும் பெடரெல் வங்கிக்கு வழக்கறிஞர் பூங்கோதை என்பவர் வழங்கிய legal opinion யையும் சான்றிட்டு வழங்கினேன்.

3. இது சம்பந்தமாக நான் 16.08.2008 ஆம் தேதி மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் ஒரு கடிதம் சமர்ப்பித்தேன். அதில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட உயிலின் அசலை தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 153/2005 வழக்கில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன். **(16.08.2008 தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (16.08.2008 ஆம் தேதி வழக்கறிஞர் கணேசன் அவர்கள் 17.12.2004 ஆம் தேதி எங்கள் வங்கிக்கு கொடுத்த legal opinion னின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (26.08.2008 ஆம் தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த கடிதத்தில் 20.01.1963 தேதியிட்ட பதிவு செய்யப்படாத உயிலின் அசலை உரிமையியல் நீதிமன்றத்தில் கொடுத்ததாக கூறியுள்ளேன். **(11.11.2009 ஆம் தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4.** அந்த கடிதத்தில் ராமலிங்கம், தமிழ்செல்வி மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் எங்கள் வங்கியிலிருந்து ரூ.15,00,000/- 01.06.2005 ஆம் தேதி பெற்றுள்ளார்கள். அந்த கடனுக்காக பக்கிரிசாமி என்பவர் guarantor ஆக கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கடனை சென்னை Zonal office ல் தலைமை மேலாளராக பணிபுரிந்த பரமேஸ்வரன் அய்யர் என்பவர் 01.06.2005 ல் sanction செய்துள்ளார். மேலும் மேற்படி கடனுக்காக சட்ட கருத்துரை வழங்கிய வழக்கறிஞர்களின் சட்ட கருத்துரையை சான்றிட்டு வழங்கினேன்.

5. **(17.12.2004 ஆம் தேதி வழக்கறிஞர் கணேசன் வழங்கிய சட்ட கருத்துரையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (19.05.2005 ஆம் தேதி வழக்கறிஞர் கணேசன் வழங்கிய சட்ட கருத்துரையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (14.08.2002 ஆம் தேதி வழக்கறிஞர் சந்திரமோகன் வழங்கிய சட்ட கருத்துரையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (20.09.2001 ஆம் தேதி**

**C.C.No. 47/2010   15.06.2023**

**வழக்கறிஞர் திருமதி. பூங்கோதை அவர்கள் பெடரெல் வங்கிக்கு வழங்கிய சட்ட கருத்துரையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**போதிய கால அவகாசம் கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.